மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 67 | 27.05.2023 (சனிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00



## இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தயார்

### மூத்த துணைத் தலைவர் : சீ.வீ.கே.சிவஞானம்!

பக்கம் 5

“ஒருமனதாக முரண்பாடு இல்லாமல் தெரிவு செய்யப்பட்டால் நான் அந்த கடமையினை சரிவர செய்யக்கூடிய ஆற்றல், பொறுப்பு எனக்குள்ளது. அதற்காக நான் யாரையும் குறை சொல்லி, யாரையும் கழுத்தறுத்து பதவிக்கு வர விரும்பவில்லை. தலைமைக்கு தகுதியுடையவர் என என்னை பலர் கேட்கின்றார்கள், சொல்லுகின்றார்கள் என்பது உண்மை.”

## கூட்டமைப்பின் இந்திய பயணம்

### மறுக்கின்றார் மாவை..!



இந்தியா - டெல்லி பயணம் தொடர்பில் எதுவித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழு விரைவில் டெல்லி செல்லவுள்ளது என

பக்கம் 5

## நாடு முன்னேற நிரந்தர அரசியல் தீர்வே ஒரே வழி

### சஜித்திடம் சம்பந்தன் நேரில் எடுத்துரைப்பு!



”நாடு முன்னேற வேண்டுமெனில் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும்.” என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் நேரில் எடுத்துரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். எதிர்க்கட்சித் தலைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் (25) மாலை நடைபெற்றது. சம்பந்தனின் கொழும்பு

பக்கம் 5

## மாணவர்களை மூர்க்கத்தனமான தாக்கிய யாழ் ஆசிரியர் கைது..!



யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் மூன்று மாணவர்களை தாக்கிய குற்றச்சாட்டில் ஆசிரியரொருவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் ஆசிரியர் ஒருவரால் மூன்று மாணவர்கள் தாக்குதலுக்கு

பக்கம் 5

## தொடர் வீழ்ச்சியை சந்திக்கும் டொலரின் பெறுமதி 400 - 450 ரூபாவிற்கு செல்லுமா..!

# தடை நீக்கப்பட்டால் இலங்கையில் ஏற்படும் மாற்றம்!

கடந்த வாரம் முதல் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருகிறது. அதன்படி நேற்றைய தினமும் (26.05.2023) அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதன்படி நேற்றைய தினம் டொலரின் கொள்வனவு விலையானது 295.63 ரூபாவாகவும், விற்பனை விலையானது 308.54 ரூபாவாகவும் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வியாழக்கிழமைக்கான (24.05.2023) நிலைமையை ஒப்பிடும் போது நேற்று வெள்ளிக்கிழமை (25.05.2023) மேலும் அதிகரித்திருந்தது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்று முன்தினத்திற்கான நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 310.95 ரூபாவாகவும், கொள்வனவு விலை 297.60 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.




பக்கம் 5



## மன்னாரில் புதிய விகாரை பணி இடை நிறுத்தம் :

### இடத்தை பேருந்து தரிப்பிடமாக மாற்றும் இராணுவத்தினர்!!!

மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதிய பௌத்த விகாரை நிர்மாணிக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியான நிலையில் அந்த பணிகளை கைவிடுவதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் சிறிலங்கா இராணுவத்தின் 542 வது படைப் பிரிவு பொறுப்பதிகாரி இதனை கூறியுள்ளார்.

பக்கம் 5

## தமிழரின் பிரச்சினை..!

### இடைக்கால நிர்வாகமே சாத்தியமானது

### அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் கருத்து..!



வேதாளம் மீண்டும் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவது போல தமிழ் அரசியல் தலைவர்களும் முருங்கை மரத்தில் ஏறுவதில் விடாப்பிடியாக உள்ளனர். தலைவர்கள் என்ன தான் முரண்பாடுகளை கொண்டிருந்தாலும் சிங்கள அரசைக் கையாளுகின்ற போதும், சர்வதேச அரசியலைக் கையாளுகின்ற போதும் ஒருங்கிணைந்து செயற்படுங்கள் என தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வேண்டி நிற்கின்றனர். தமிழ் கட்சிகள் இவ் வேண்டுகோளை ஒரு சதத்திற்கு கூட கணக்கெடுக்கவில்லை என அரசியல் ஆய்வாளர்

பக்கம் 5,6



# இனப் படுகொலையால் சீரழியும் ரோஹிங்கியர்: பௌத்த மேலாண்மையால் சிதையும் மியான்மார்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -




மியான்மாரில் சிறுபான்மை ரோஹிங்கிய மக்கள் மீதான வன்முறை இன்னமும் தொடர்கிறது. இந்த மக்களின் கலாச்சார அடையாளத்தை சிதைத்துஇன அழிப்பை மியான்மார் அரசு தொடரும் அவலத்தை சர்வதேச நாடுகள் கண்டித்துள்ளன. மியான்மார் இராணுவ அரசின் ஜுன்டா ஆட்சியில் தன் இன மக்களையும் கொடூரமாகவே தண்டித்து வருகிறதை காணலாம்.

## மியன்மார் – இரும்புத் திரை நாடு :

பௌத்த மதத்தை ஆட்சி மதமாகக் கொண்டுள்ள மியன்மார் உலக நாடுகளினால் “இரும்புத் திரை நாடு” என்று அழைக்கப்படுகின்றது.

பர்மா என்ற பெயரில் அழைக்கப்பட்ட நாடு 1989ம் ஆண்டு மியான்மார் ( **Union of Myanmar)** என்று மாற்றியமைக்கப்பட்டது. சுமார் 130 இனங்கள் வாழுகின்ற மியன்மாரில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளும் வட்டார வழக்குகளும் காணப்படுகின்றன.

பல்லாயிரக்கணக்கான பௌத்த விகாரைகள் நாடு முழுவதும் பரவியிருப்பதால், இது **‘Land of Pagodas’** என்றும் அழைக்கப்படுகின்றது. சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஆங் சாங் சூகி மியன்மார் இராணுவத்திற்கு எதிராக போராடி, ஜனநாயத்தை வெளிப்படுத்த பாடுபட்டார்.

இதனை எதிர்த்து இராணுவம் மேற்கொண்ட செயல்பாடுகளை விபரிக்கும் விதமாகவே “இரும்புத் திரை நாடு” என்று மியன்மார் அழைக்கப்படுகின்றது.

## இன அழிப்பின் உச்சம் 2010 :

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், பாராளுமன்ற தேர்தலில் ரோஹிங்கிய முஸ்லிம்கள் சார்பில் போட்டியிட்ட 3 பேர் வெற்றி பெற்று எம்பிக்களாக பாராளுமன்றம் சென்றனர். ஆனால் பின்னாளில் அவை செல்லாது என சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு அவர்கள் நீக்கப்பட்டனர். கடந்த 2012 ஆண்டு முதல் மிகப்பெரிய அளவில் ரோஹிங்கிய மக்கள் அங்குள்ள பௌத்த மத தீவிரவாதிகளால் சொல்லணா துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர்.

மியான்மாரில் மிகப்பெரிய இன அழிவையே (Genocide) நடத்தினர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கொலை செய்யப்பட்டனர், உயிரோடு எரிக்கப்பட்டனர். மிகப்பெரிய மனித உரிமை மீறல்கள் மியான்மர் அரசால் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டது.

## ஐநா மனித உரிமை ஆணையம் :

இது தொடர்பாக ஆய்வில் ஈடுபட்ட ஐநா பிரதிநிதிகளும் மனித உரிமை ஆணைய நிர்வாகிகளுமான மார்சுகி ட்ரூஸ்மேன், ராதிகா மற்றும் கிறுஸ்டோஃபர் சிடோட்டி ஆகியோர், மிகப் பெரிய இன அழிவே அங்கு நடைபெற்றதாகவும், முழுக்க முழுக்க மியான்மர் இராணுவத்தின் நேரடி ஆதரவுடன் அவை நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாகரீகத்தின் உச்சத்தில் மனிதர்கள் வாழ்வதாக கருதப்படும் இக்கால கட்டத்தில் இப்படியொரு பயங்கரமும் நடைபெறுகின்றதா என்று சிந்திக்கும் அளவு மியன்மார் - பர்மாவில் ரோஹிங்கிய மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் உச்சத்தை அடைந்திருக்கின்றன. மியான்மார் - பர்மாவில் நடக்கும் இனப்படுகொலைகள் நெஞ்சைப் பிழியும் காட்சிகளாக மனதை உருத்துகின்றன.

## பாரிய மனித உரிமை மீறல்கள் :

கொலை, கற்பழிப்பு, பாலியல் வன்புணர்வு, உயிரோடு எரித்து கொலை செய்தல், துடிக்கத் துடிக்க உடற்பாகங்களை வெட்டுதல் போன்ற சகித்துக் கொள்ள இயலாத மனித உரிமை மீறல்கள் அங்கு நடந்தியிருப்பதாகவும், மிகபெரிய இன அழிப்பிற்கான அடிப்படை உதாரணமாக (a textbook of ethnic cleansing) அவை அமைந்திருப்பதாகவும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

கிட்டத்தட்ட 50 ஆயிரம் முஸ்லிம்கள் மியான்மர் இராணுவத்தாலேயே கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். 4,50,000 பேர் வங்கதேசத்திற்கும், 40 ஆயிரம் பேர் இந்தியாவுக்கும் அகதிகளாக தப்பி வந்தனர்.
மியான்மரில் வன்முறையால் கடந்த ஆண்டு மட்டும் சுமார் 6,700 ரோஹிங்ய இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டதாக மெடிசின்ஸ் சான்ஸ் பிராண்டியர்ஸ் அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ராக்கைன் மாகாணத்தில் பெரும்பான்மையாக வசித்து வந்த ரோஹிங்ய இன இஸ்லாமியர்கள் மீது கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் மியான்மர் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. அவர்களது வீடுகளை தீயிட்டு கொளுத்தி, பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியதாக குற்றச்சாட்டு எழுந்தள்ளது. இதைத் தொடர்ந்து சுமார் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட ரோஹிங்ய இன மக்கள் வாழ்வாதாரத்தை தேடி அண்டை நாடான வங்கதேசத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

## யார் இந்த ரோஹிங்கிய மக்கள்:

ரோஹிங்கிய மக்கள் மியான்மரில் இராக்கைன் மாநிலத்தின் வடக்கே வசிக்கும் இந்தோ - ஆரிய இனக்குழுவாகும். இவர்கள் ரோஹிங்கிய மொழியைப் பேசுகின்றனர்.

ரோஹிங்கிய மக்கள் இராக்கைன் மாநிலத்தின் பூர்வகுடிகள் என ரோஹிங்கிய மக்களும், சில ஆய்வாளர்களும் கூறும் அதே வேளையில், இவர்கள் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் வங்காளத்தில் இருந்து வந்து குடியேறியவர்கள் எனவும்,அல்லது குறைந்தது 1948 பர்மிய விடுதலைக்குப் பின்னரும், 1971 வங்கதேச விடுதலைப் போரின் பின்னரும் குடியேறியவர்கள் எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பௌத்த மதத்தை பெரும்பான்மையாக கொண்ட மியான்மர் நாட்டின் ‘ராக்கைன்’ பகுதியில் வசிக்கும் குறிப்பிட்ட இன மக்கள் தான் ரோஹிங்கிய இனத்தவர்கள். கிட்டத்தட்ட 15 லட்சம் ரோஹிங்கிய மக்கள் அங்கு வசித்து வந்தனர், அனைவருமே முஸ்லிம்கள். இவர்களது பூர்வீகத்தை தலைமுறை பின்னோக்கிப் பார்த்தால், 15 ஆம் நூற்றாண்டு முதல் அவர்களது பூர்வகுடிக்கான தடயங்கள் மியான்மர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கிடைப்பதாக ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கிறது.

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பனியுடனான யுத்த கால கட்டமான 1826ஆம் ஆண்டு, ரோஹிங்கிய முஸ்லிம்கள் ‘ராக்கைன்’ பகுதியில் குடி பெயர்கின்றனர். மியான்மார் அரசு 1982 ஆம் ஆண்டு, குடியுரிமை சட்டம் ஒன்றை வகுக்கிறது. பல பகுதிகளிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்து தங்கள் நாட்டில் வாழும் பல்வேறு குழுக்களையும் மாறுபட்ட பல இனங்களையும் மியான்மர் தேசத்து குடிமக்களாக அங்கீகரிக்கும் சட்டம் அது.

காச்சின் எனப்படும் பர்மா இனம், கரென் இனம், சின், மோன், ராக்கைன், ஷான், கயா போன்ற பல குழுக்களை தங்கள் நாட்டு குடிமக்களாக அங்கீகரித்த அந்த சட்டமானது, இலாவகமாக ரோஹிங்கிய முஸ்லிம்களை மட்டும் தவிர்த்தது. அதற்கு வழி செய்யும் வகையில் அந்த சட்டத்தில், “1826 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த மண்ணில் குடிபெயர்ந்தவர்களாக இருக்க வேண்டும்” என்றவொரு விதியை சேர்த்துக் கொண்டது.

## குடியுரிமை இழப்பு :

இதன் விளைவு, ஐந்து நூற்றாண்டுகளாக மியான்மரில் வாழ்ந்து வந்த மக்கள் தங்கள் குடியுரிமையை இழந்தனர்.

சொந்த நாட்டிலேயே அகதிகளாக, இரண்டாம் தர குடிமக்களாக வாழும் அவலம் நேர்ந்தது. ஆனால், வரலாறு அவர்களை மியான்மரின் குடிமக்களாகவே அடையாகம் கண்டு வந்துள்ளது.

1948 முதல் 2010 வரை, மியான்மரில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் ரோஹிங்கிய மக்கள் தங்கள் வாக்குகளை செலுத்தி வந்திருக்கின்றனர். 1982 ஆம் ஆண்டுக்கு பிறகு அவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை **(temporary scrutiny cards)** ஒன்று வழங்கப்பட்டது.

## அசின் விராதுவின் 969

969 இயக்கம் (969 Movement) என்பது பௌத்தர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மியன்மாரில் இஸ்லாமிய பரம்பலை எதிர்க்க உருவாக்கப்பட்ட ஒரு தேசியவாத அமைப்பாகும்.

மியன்மாரின் சர்ச்சைக்குரிய பௌத்த மதகுரு அசின் விராது தேரர் இதன் தலைவராக இருந்து செயற்படுகிறார்.

இவ்வியக்கம் சர்வதேச மட்டத்தில் பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. பன்னாட்டு ஊடகங்கள் இதன் தலைவர் அசின் விராது தொடர்பில் பலத்த விமர்சனைத்தை முன்வைத்தன.

அமெரிக்காவின் டைம் பத்திரிக்கை “பௌத்த பயங்கரவாதத்தின் முகம்” என்று இவரை விமர்சனம் செய்திருந்தது.

மியன்மாரில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் சூத்திரதாரியாக இருப்பது இவரும், இவருடைய 969 இயக்கமும் தான். மியன்மாரின் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளை இவரே வழிநடத்தி வருகிறார். இந்த அமைப்பை வழிநடத்தும் அஸின் விராது தேரரை “பர்மாவின் பின்லேடன்” என சர்வதேச ஊடகங்கள் வர்ணிக்கின்றன.

## ஆயுத போராட்டத்தில் ரோஹிங்யா :

மியான்மர் தேசத்தில் கடந்த 2012-ம் ஆண்டு முதல் மனித உரிமைக்காக “அரக்கான் ரோஹிங்யா இரட்சணிய சேனை” என்ற பெயரில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அமைப்பு, மியான்மர் ராணுவத்தினர் மற்றும் போலீஸ் படையினர் மீது தாக்குதல் நடத்திவருகிறது.

அரக்கான் ரோஹிங்யா இரட்சணிய சேனை **Arakan Rohingya Salvation Army, (ARSA)**, என்றும் அழைக்கப்படுவது, மியான்மரின், வடக்கு ராகினி மாநிலக் காடுகளில் செயல்படும் ரோஹிங்யா கிளர்ச்சி குழு ஆகும்.

சர்வதேச நெருக்கடிக் குழுவின் 2016 திசம்பர் அறிக்கையின்படி, ஏஆர்எஸ்ஏ உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் சிட்வெவில் சிறையில் அடைக்கப்பட்ட நபர்களை விசாரணை செய்த போலீசார் இக் குழுவின் குறிக்கோள், மியான்மரில் ”ரோஹிங்ஜியருக்கான ஜனநாயக முஸ்லிம் அரசை” உருவாக்குவதே என்றனர்.

## ஐ.நா. மனித உரிமைக் குழு அறிக்கை :

ஐ.நா. மனித உரிமைக் குழு அறிக்கையின்படி உயிருக்குப் பயந்து ஆயிரக்கணக்கான ரோஹிங்யா மக்கள், வங்கதேசம், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். மிஷோரத்தில் உள்ள சிஷா பகுதியில் மியான்மர் அகதிகள், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மியான்மரில் ரோஹிங்யா மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறையைக் கட்டுப்படுத்த, ஐ.நா., தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென வங்கதேசம் பல முறை கோரிக்கை விடுத்தது. மியான்மர் விவகாரம் தொடர்பாக விவாதிக்க, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை உடனடியாகக் கூட்ட, பிரிட்டன் கோரிக்கை விடுத்தது. மியான்மர் வன்முறையை செயற்கைக்கோள் புகைப்படங்களைக் கொண்டு தொடர்ந்து ஆராய்ந்துவருவதாக, ஐ.நா. மனித உரிமைக் குழு தெரிவித்தது.

இது தொடர்பாக ஆய்வில் ஈடுபட்ட ஐநா பிரதிநிதிகளும் மனித உரிமை ஆணைய நிர்வாகிகளுமான மார்சுகி ட்ரூஸ்மேன், ராதிகா மற்றும் கிறுஸ்டோஃபர் சிடோட்டி ஆகியோர், மிகப்பெரிய இன அழிவே அங்கு நடைபெற்றதாகவும், முழுக்க முழுக்க மியான்மர் இராணுவத்தின் நேரடி ஆதரவுடன் அவை நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

# நாங்கள் பௌத்த மதத்திற்கோ சிங்களவர்களிற்கோ எதிரானவர்கள் அல்லர்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் சுகாஷ்



நாங்கள் பௌத்த மதத்திற்கோ அல்லது சிங்களவர்களிற்கோ எதிரானவர்கள் அல்லர் என்றும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் அமைக்கப்படும் சட்டத்திற்கு புறம்பாக அமைக்கப்படும் புத்த சிலைகளையும், பௌத்த விகாரைகளையுமே எதிர்ப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில், எந்த வகையான சட்டத்தினை மீறாத போதிலும் நீதிமன்ற கட்டளையினை மீறியதாக குறிப்பிட்டு என்னை கைது செய்தனர். நீதிமன்ற கட்டளையில் மிகவும் தெளிவாக வழிபாட்டிற்கோ, பொது போக்குவரத்திற்கோ தடை செய்ய கூடாது என கூறப்பட்டுள்ளது.

வலுக்கட்டாயமாக அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் என்னுடன் கைது செய்த 8 பேரையும் அழைத்து சென்ற ஓ.ஐ.சி ஏனையவர்களை சுதந்திரமாக விட்டதுடன், என்னை மட்டும் தனியான அறையினுள் உளவியல் ரீதியாக அச்சுறுத்தும் நோக்கில் வைத்திருந்தனர். அது மட்டுமன்றி காலை 10 மணியளவில் பலாலி பொலிஸ் நிலையத்து அழைத்து சென்றவர்கள் இரவு 10 மணி வரை என்னிடமிருந்து எந்தவொரு வாக்கு மூலத்தினையும் பெறவில்லை.

இங்கு மட்டுமன்றி நாட்டில் தமிழர் தாயகத்தினை ஆக்கிரமிக்கும் நோக்குடன் எங்கு கட்டுமானம் வந்தாலும் எதிர்ப்போம். நாம் சிங்கள மக்களிற்கோ, தேரர்களிற்கோ எதிரானவர் அல்லர்.

தமிழர் பகுதிகளை ஆக்கிரமிக்கும் வகையில் அமைக்கப்படும் புத்த சிலைகளையும், விகாரைகளையுமோ எதிர்க்கின்றோம்.

மாறாக பௌத்த மதத்தினையோ சட்டரீதியான தலதா மாளிகை, நாக விகாரை போன்றவற்றை எதிர்க்கவில்லை.

ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை தடுக்க வேண்டுமாயின் மக்கள் அணி திரள வேண்டும். அது மட்டுமன்றி இந்த விடயத்தில் பல ஊடகவியாளர்களிற்கு அச்சுறுத்தல்கள் இடம் பெற்றுள்ளன. என தெரிவித்தார்.

# உருத்திரபுரம் சிவன் கோவிலின் அளவீட்டுப் பணி நிறுத்தப்படும்!

## சிறீதரன் எம்.பிக்கு அமைச்சர் உறுதி!



உருத்திரபுரம் சிவன்கோவில் மீது தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள அளவீட்டுப் பணிகளை இடைநிறுத்துவதாக தொல்லியல் துறை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு உறுதியளித்துள்ளர்.

நேற்று முன்தினம் (25) வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் இடையில், பத்தரமுல்லயில் அமைந்துள்ள அமைச்சின் தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, உருத்திரபுரம் சிவன் கோவில், வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை, குச்சவெளி விகாரைகள், தையிட்டி விகாரை, ஆனையிறவிலும், கிளிநொச்சி நகரிலும் புதிய விகாரை அமைப்பதற்கான முன்னெடுப்புகள், பரந்தன் சந்தி புத்தர் சிலை, கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் விகாரை அமைத்தல் மற்றும் பூநகரி விகாரை உள்ளிட்ட விடயங்களை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததோடு, தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பில் தன்னால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் அமைச்சரிடம் கையளித்திருந்தார்.

இதன்போது, புனித பூமிகளுக்குரிய காணிகளை பொதுமக்கள் கையகப்படுத்த முனைவதாலேயே அவ்விடங்களை தாம் அளவீடு செய்வதாக தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டதை உடனடியாகவே மறுத்துரைத்த சிறீதரன் எம்.பி, எங்கள் மக்கள் அத்தகைய செயல்களில் ஒருபோதும் ஈடுபடவில்லை எனவும், பொய்யுரைகளைப் பரப்பி மதப்பதற்றத்தை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடாது எமது மக்களை நிம்மதியாக வாழ விடுங்கள் என்று மிகக் காட்டமாக தெரிவித்திருந்தார்.

நீண்ட நேர விவாதத்தின் பின்னர், உருத்திரபுரம் சிவாலயத்தில் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள அளவீட்டுப் பணிகளை இடைநிறுத்துவதற்கு, தொடர்புடைய திணைக்களங்களுக்கு உத்தரவு பிறப்பிப்பதாக அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் உறுதியளித்ததோடு, குருந்தூர் மலை மற்றும் வெடுக்குநாறி மலை விவகாரங்கள் தொடர்பில் அவற்றின் வழக்குத் தீர்ப்புகளின் பின்னர் விசேட கலந்துரையாடலை ஒழுங்கு செய்து தீர்மானங்களை மேற்கொள்வதாகவும், தையிட்டி விகாரை இராணுவத்தினரால் அமைக்கப்பட்டதே அன்றி, அதற்கும் தொல்லியல் திணைகளத்திற்கும் தொடர்பில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

குறிந்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், சிவஞானம் சிறீதரன், கோவிந்தன் கருணாகரம், தவராசா கலையரசன் மற்றும் குலசிங்கம் திலீபன் ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பகுதிகளில் ஆக்கிரமிக்கப்படும் 37 கிராமங்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்



வடக்கு மாகாணத்தில் உள்ள 37 கிராம சேவகர் பிரிவுகளை ஒன்றிணைத்து மகாவலி ஜே வலயமாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை தீர்மானித்துள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. சிங்கள குடி பரம்பலை விரிவுப்படுத்தும்.

1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானி மீள்பரிசீலனை செய்யப்படும் என குறிப்பிடும் ஜனாதிபதி மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை ஏன் கவனத்தில் கொள்ளவில்லை.

இராணுவம், மகாவலி அதிகார சபை உட்பட அரச திணைக்களங்கள் தமிழர்களுக்கு எதிராகவே செயற்படுகிறது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (25) இடம்பெற்ற நிதி ஒழுங்குப்படுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

2007 ஆம் ஆண்டு மகாவலி அதிகார சபையின் எல் வலயத்தில் தமிழர்களுக்கு சொந்தமான காணிகள் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தென்னிலங்கை சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மகாவலி அதிகார சபை ஊடாக முன்னெடுக்கப்படும் சிங்கள குடியமர்வு செயற்பாடுகளை பாராளுமன்றத்தின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளோம்.

மகாவலி எல் வலயம் மீள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட வேண்டும்,மகாவலி அதிகார சபை காணிகள் பிரதேச சபைக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம். 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களம் வெளியிட்ட வர்த்தமானிகளை மீள் பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி உரிய அமைச்சுகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஆனால் தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளை புதிதாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சிங்கள பரம்பரை விரிவுப்படுத்தும் செயற்பாடுகளில் மகாவலி அதிகார சபை முன்னெடுக்கிறது. இவற்றை மகாவலி அதிகார சபை கைவிட வேண்டும்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள அம்பாள் புரம், கரும்புள்ளியான், கொள்ளிவிலாங்குளம், கொம்புமுறிப்பு, நெட்டாங்கண்டல், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், பாண்டியன்குளம், பொன்னகர், பூவரசம் குளம், செல்வபுரம், சிராட்டிக்குளம், சிவபுரம், வன்னிவிலாங்குளம், விநாயகபுரம், ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளையும், அதேபோல் அனிச்சங்குளம், பாரதி நகர், புகழேந்திநகர், திருநகர், யோகபுரம் மத்தி, யோகபுரம் கிழக்கு ஆகிய 07 கிராம அலுவலர் பிரிவுகளையும், மாந்தை மேற்கில் உள்ள பாலியாறு, அந்தோணியார்புரம், ஆத்திமோட்டை, இலுப்பக்கடவை, கள்ளியடி, கூறாய், கோயிற்குளம், காயாநகர், பெரியமடு ஈஸ்ட், பெரியமடு வெஸ்ட், பல்லமடு,வெடுத்தல்மடு ஈஸ்ட், நோர்த், உள்ளடங்களாக 15 கிராம சேகவர் பிரிவுகளையும் இணைத்து 37 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஒன்றிணைந்து மகாவலி ஜே வலயமாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலங்கள் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்படும் என குறிப்பிடும் ஜனாதிபதி மகாவலி அதிகார சபையின் இந்த செயற்பாட்டை ஏன் கவனிக்கவில்லை.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி விடுவிக்கப்படும் என சர்வதேசத்திடம் குறிப்பிட்டு விட்டு மகாவலி அதிகார சபை ஊடாக காணிகளை தொடர்ந்து கையகப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் சகல பகுதிகளிலும் குடி கொண்டுள்ளார்கள்.

இராணுவ முகாம்களில் புத்தர் நிலை வைக்கப்படுகிறது, விகாரைகள் கட்டப்படுகிறது. தமிழர் பகுதியில் பௌத்த மயமாக்கல் தற்போது இராணுவ மயமாக்கபபட்டுள்ளது.

இந்த நாட்டில் பல்லின சமூகத்தின் உரிமைகள் பெயரளவில் மாத்திரம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆட்சியாளர்களும் எமது விடயத்தில் பார்வையற்றவர்களாக உள்ளார்கள்.

இராணுவமயமாக்கல் ஊடாக பௌத்த மயமாக்கலையும், மகாவலி அதிகார சபை ஊடாக சிங்கள பரம்பலை விரிவுப்படுத்தும் செயற்பாட்டையும் அரசாங்கம் உடனடியாக இடைநிறுத்த வேண்டும்.- என்றார்.



# பொலிஸாரின் செயற்பாடு முறையற்றது : விசாரணை அவசியம்
## கஜேந்திரகுமார் எம்.பி. சபாநாயகரிடம் வலியுறுத்தல்

தையிட்டி பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது, அங்கே பொலிஸார் செயற்பட்ட விதம் முறையற்றது. இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) இடம்பெற்ற நிதி ஒழுங்குப்படுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் சட்டத்திற்கு முரணான வகையில் பௌத்த விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள 15 குடும்பங்களின் உறுதி பத்திரம் உள்ள காணியே இது.இங்கு இராணுவத்தினர் அடிக்கல் வைத்த வேளை அது தொடர்பில் கேட்ட போது அவ்வாறு தனியார் காணியில் விகாரை அமைக்க முடியாது என்று அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர். ஆனால் அங்கே தற்போது விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் கடந்த 23 ஆம் திகதி நாங்கள் அங்கே போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தோம்.அதன்போது பொலிஸார் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை தாக்கியுள்ளனர். அதற்கான ஆதாரங்கள் உள்ளன. பாராளுமன்ற வாரம் என்பதனால் அவரை கைது செய்வதில் சிக்கல்கள் இருந்தமையினால் அதற்கு பதிலாக அங்கிருந்த 9 பேரை கைது செய்தனர். அவர்களிடையே சட்டத்தரணி ஒருவரும் இருந்தார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சட்டத்திற்கு முரணான வகையில் தாக்கப்பட்டுள்ளார். போராட்டத்தால் அங்கே இடையூறுகள் இடம்பெறுவதாகவே பொலிஸார் கூறியுள்ளனர்.அவ்வாறு என்ன இடையூறு நடந்துள்ளது. சட்டத்திற்கு முரணான வகையில் தனியார் காணியில் பௌத்த விகாரையை நிர்மாணித்துள்ளார்கள். மக்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு எதிராக போராடும் போது,அவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றுகிறார்கள். இந்த நெருக்கடிக்கு காரணம் என்ன? எண்ணிக்கையில் பெரியதாக இருக்கும் சமூகமானது அரச அதிகாரங்களை பயன்படுத்திக்கொண்டு முற்றுமுழுதாக ஏனைய சமூகத்தினருக்கு தீங்கு ஏற்படுத்துகின்றனர். இவ்வாறான நிலைமையில் மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். அவர்களும் பிரதி பதிலை காட்டுவார்கள். நெருக்கடி நிலைமைக்கு இதுவே காரணம்.

இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்களின் உரிமைகளை அழிக்கிறது. கடந்த 75 வருடங்களாக செய்த தவறுகளை மீண்டும் செய்ய மாட்டோம் என்று கூறினாலும்,தொடர்ந்தும் அதனையே செய்கின்றீர்கள். அதற்கான காரணம் நீங்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்தும் இவ்வாறு நடந்தால் நாடு முன்னேற்றமடையாது. இன்னும் எத்தனை வருடங்கள் போனாலும் நாடு இதே நிலையிலேயே இருக்கும். இதேவேளை குறித்த விடயத்தில் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பில் சபாநாயகர் தேவையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# அரசாங்கத்தின் நிவாரண வேலைத்திட்டத்தில் மலையக மக்கள்
## உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் - வே.இராதாகிருஷ்ணன்



அரசாங்கத்தின் நிவாரண வேலைத்திட்டத்தில் மலையக மக்கள் உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். இது தொடர்பாக உலக வங்கி பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதும் தெரிவித்திருக்கிறோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) இடம்பெற்ற நிதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் நிவாரணப்பணி வேலைத்திட்டத்தில் மலையக மக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். உலக வங்கியின் உதவியுடனே இதனை முன்னெடுக்க இருக்கிறது. அதனால் உலக வங்கி பிரதிநிதிகளுடனும் இது தொடர்பாக கலந்துரையாடி இருக்கிறோம். நாடு வங்குரோத்து அடைந்திருக்கும் நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவி செய்யும் நோக்கிலே இதனை அரசாங்கம் செய்ய முற்பட்டிருக்கிறது. அதனால் பின்தங்கிய மக்கள் என்ற வகையில் மலையக மக்களை இதில் புறக்கணித்து விடக்கூடாது என கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. வசதி உள்ளவர்களிடமிருந்து அதிக வரியை பெற்று ஏழை மக்களுக்கு வழங்குவதன் மூலம் அரசாங்கம் இதனை சமநிலைக்கு கொண்டுவர முடியும். அதேநேரம் வியாபார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் பதுளையை சேர்ந்த பெண்ணின் மரணம் தொடர்பாக பலரும் பேசிவருகின்றனர். அதனால் அந்த மரணம் கொலையா தற்கொலையா என முறையாக விசாரணை நடத்துவதுடன் இந்த விடயத்தில் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றார்.

# கிளிநொச்சியில் காணி விடுவிப்பு தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள முக்கிய தீர்மானம்!



கிளிநொச்சியில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் ஆகியவற்றின் கீழுள்ள கணிசமானளவு காணிகளை விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் நிறைவேற்று அதிகாரிகளுக்கும் கிளிநொச்சி மாவட்ட துறைசார் அதிகாரிகளுக்கும் இடையில் (25.05.2023) கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றினால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த கணிசமான காணிகளையும், நீர்ப்பாசணம் மற்றும் நீர்வேளாண்மைக்கு பொருத்தமான குளங்களையும் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தமையினால் காடுகளாக மாறியிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் மக்கள் குடியிருப்புக்களும் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தினாலும் வனஜீவராசிகள் திணைக்களத்தினாலும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பாக, துறைசார் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடனும் ஆவண ரீதியான ஆதாரங்களை முன்வைத்து தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வந்துள்ளார். நாட்டின் பொருளாதாரத்திற்கு கை கொடுக்க கூடிய விவசாயம் மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகள் முடக்கப்பட்டிருக்கிறது என்ற ஆதங்கத்தினையும் வெளிப்படுத்தி வந்தார்.

இந்நிலையில், 85 ஆம் ஆண்டிற்கு முன்னர் விவசாய நிலங்களாகவும் மக்கள் குடியிருப்புக்களாகவும் இருந்தமையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை கொண்ட காணிகளையும் கணிசமானளவு குளங்களையும் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் நிறைவேற்று அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) பிரதேச செயலாளர்கள், காணித் திணைக்களத்தின் அதிகாரிகள், மாவட்ட நீர்ப்பாசண பொறியியலாளர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரதிநிதிகள் உட்பட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

### யாழ். நகரில் இடம்பெற்ற
# வாள்வெட்டு
## இருவர் படுகாயம்



யாழ்.நகர் காங்கேசன்துறை (கே.கே.எஸ்) வீதி சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள பழக்கடை நடத்துவோர் மீது இனம்தெரியாத குழு ஒன்று வாள்வெட்டு தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் (25.05.2023) இரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் காவல் துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## இலங்கை தமிழரசுக் கட்சியின்...

அனைவரும் ஏகமனதாக என்னை தெரிவு செய்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையினை ஏற்கத் தயார் என அக்கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தமிழரசு கட்சியின் தலைமை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், "நான் பதவிக்காக கட்சிக்குள் போகவில்லை, முரண்பாடு இல்லாத நிலையேற்பட்டு அனைவரும் ஏகமனதாக தெரிவு செய்வார்களாக இருந்தால், போட்டியில்லாது அனைவரதும் ஒத்துழைப் போடும், இணக்கப்பாட்டோடும் அதை நான் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் உள்ளேன்.

ஒருமனதாக முரண்பாடு இல்லாமல் தெரிவு செய்யப்பட்டால் நான் அந்த கடமையினை சரிவர செய்யக்கூடிய ஆற்றல், பொறுப்பு எனக்குள்ளது. அதற்காக நான் யாரையும் குறை சொல்லி, யாரையும் கழுத்தறுத்து பதவிக்கு வர விரும்பவில்லை. தலைமைக்கு தகுதியுடையவர் என என்னை பலர் கேட்கின்றார்கள், சொல்லுகின்றார்கள் என்பது உண்மை.

இருந்தாலும் கூட எங்களுடைய கட்சி ஒற்றுமையாக போக வேண்டும். ஒருமனதாக கட்சி போக வேண்டும் என்ற எண்ணம் எனக்குள்ளது. அவ்வாறு இணக் கப்பாடு வந்தால் அதை நான் ஏற்றுக்கொள்வேன்." என சீ.வீ. கே.சிவஞானம் தெரிவித் துள்ளார்.

## கூட்டமைப்பின் இந்திய பயணம்...

வெளியாகிய தகவலையடுத்து செய்திப்பிரிவு மாவை சேனாதிராஜாவை தொடர்புகொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவொன்று விரைவில் டெல்லி செல்லவுள்ளது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இந்திய மத்திய அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையின் பிரகாரமே இந்த விஜயம் அமையவுள்ளது என்று தெரியவருகின்றது.

அரசியல் தீர்வு திட்ட விடயத்தில் இந்தியாவின் தலையீடு அவசியம் என வலியுறுத்தி வரும் கூட்டமைப்பு, இதற்கு முன்னரும் டெல்லி செல்ல முற்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றன. எனினும் பயணம் பிற்போடப்பட்டது. இந்நிலையிலேயே தற்போது டெல்லி செல்வதற்குக் கூட்டமைப்பு தயாராகி வருகின்றது எனத் தெரியவருகின்றது.

டெல்லி பயணத்தின்போது இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தவுள்ளது.

## மாணவர்களை மூர்க்கத்தன...

உள்ளான நிலையில் இருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஆசிரியர் மூன்று மாணவர்களை அழைத்து அவர்களின் தலை முடி தொடர்பில் வினாவிய பின் அவர்களை கையால் தாறுமாறாகத் தாக்கியுள்ளதாக தெரியவருகிறது. ஆசிரியரின் தாக்குதலுக்குள்ளான ஒரு மாணவன் மூக்கால் இரத்தம் வடிந்த நிலையிலும், மற்றைய மாணவன் மயக்கமுற்ற நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவனின் தந்தை கூறுகையில், என்ன காரணத்துக்காக குறித்த ஆசிரியர் தன்னை அழைத்தார் என்பது தனக்கு தெரியாது என எனது மகன் கூறியுள்ளார். அத்துடன் திடீரென கைகளால் முகம் தலைப் பகுதிகளை ஆசிரியர் தாக்கியதாகவும் மகன் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்ல, குறித்த ஆசிரியர் மன நோயால் பாதிக்கப்பட்டவர் எனத் தான் அறிந்ததாகவும் இவ்வாறான ஆசிரியரை பாடசாலையில் வைத்திருப்பது ஏனைய மாணவர்களுக்கும் அச்சுறுத்தலாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே மனநோய் உள்ள ஆசிரியர் ஒருவரைப் பாடசாலையில் வைத்திருப்பது தொடர்பில் உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிலையில் ஆசிரியர் தெல்லிப்பழை காவல்துறையினரால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

## நாடு முன்னேற நிரந்தர அரசி...

இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. மேற்படி சந்திப்பு தொடர்பில் சம்பந்தன் எம்.பியிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "நாம் இருவரும் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் பேசினோம். எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் பேசினோம். பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் பேசினோம். அரசியல் தீர்வு குறித்தும் முக்கிய கவனம் செலுத்திப் பேசினோம்.

நாட்டில் சமாதானம், சமத்துவம் நிலவ வேண்டுமெனில் - பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும் என்று சஜித் பிரேமதாஸவிடம் எடுத்துரைத்தேன். அதை அவர் ஏற்றுக்கொண்டார். மிகவும் முக்கியமான சந்திப்பு இது." - என்றார்.

இந்தச் சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கையில், "நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது. நாட்டின் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள மரண அடி மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள வீழ்ச்சி குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது." - என்றார்.

## தொடர் வீழ்ச்சியை சந்திக்கும்...

பொருளாதார நெருக்கடி நிலை தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் டொலரின் பெறுமதி அதிவேக வளர்ச்சியை பதிவு செய்திருந்தது, 371 ரூபாவாக அதன் விற்பனை பெறுமதியும், கொள்வனவு பெறுமதி 370 ரூபாவையும் அண்மித்திருந்தது.

இந்தநிலை, இவ்வருடம் பெப்ரவரி மாதம் வரையில் நீடித்திருந்தது. இந்த மாற்றமானது கழுத்தை நெரிக்கும் நெருக்கடியை எதிர்நோக்கியிருந்த மக்களுக்கு ஓரளவேனும் மூச்சுவிடக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருப்பதாக ஆய்வாளர் கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மீண்டும் டொலரின் பெறுமதியானது குறையத் தொடங்கியுள்ளது. எனினும் இதன் பலன் எவ்வாறு மக்களுக்கு கிடைக்கிறது கிடைக்கப் போகிறது என்பது விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம்.

அண்மையில் இலங்கை ஐக்கிய தொழில் முயற்சியாளர் சங்கத்தின் தலைவி டானியா எஸ்.அபேசிங்க ஊடகங்களுக்கு விடுத்திருந்த அறிக்கையில், டொலர் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதும், அதன் பலாபலன்கள் இன்னும் மக்களுக்கு கிட்டவில்லை. கடந்த காலங்களில் இலங்கை ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆயினும் அதற்கேற்ப தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப் பொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்படவில்லை. மறுபுறத்தில் பொதுமக்களின் பயன்பாட்டுப் பொருட்களுக்கான விலையும் குறையவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

அதேநேரம் மக்களுக்கு பலனை வழங்கும் வகையில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் விசேட வேலைத்திட்டம் தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார். இவர் கூறுகையில், டொலரின் பெறுமதி குறைவடையும் போது பொருட்களின் விலைகளும் நியாயமான முறையில் விதிக்கப்பட வேண்டும்.

சந்தையில் 75 வீதமான பொருட்கள் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டவை அல்லது இறக்குமதியை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, வர்த்தக மற்றும் கொள்கை அமுலாக்கல் திணைக்களம், நுகர்வோர் விவகார அதிகார சபையுடன் இணைந்து தற்போதைய நாட்களில், ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. டொலரின் பெறுமதி வீழ்ச்சிக்கு அமைய, சந்தையில் அத்தியாவசிய பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களின் விலை குறைவடைந்துள்ளதா என்பது ஆராயப்படுகிறது.

அவ்வாறு விலை குறைவடையாவிட்டால், அது தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய தலையீடுகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க உள்ளதாக சுட்டிக்காட்டியிருந்தார். மேலும், டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியின் பலனை மக்களுக்கு வழங்கும் வகையில் அரசாங்கம் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க தற்போது டொலரின் விலையில் பதிவாகும் வீழ்ச்சியானது நிரந்தரமற்ற ஒரு மகிழ்ச்சி எனவும், விரைவில் டொலரின் பெறுமதி மாபெரும் அதிகரிப்பை சந்திக்கும் எனவும் பொருளாதார நிபுணர்கள் பலர் எச்சரிக்கைகள் விடுத்து வருவதையும் மறுக்க முடியாது.

அதன்படி அண்மையில் நாட்டில் கடந்த சில நாட்களாக டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ள போதும், டொலர் ஒன்றின் பெறுமதி 400 - 450 ரூபாவிற்கு செல்லும் சாத்தியம் இருப்பதாக குளோபல் ஸ்ரீலங்கா மன்றத்தின் தலைவர் மஞ்சு நிஷங்க எச்சரிக்கை விடுத்திருந்தார்.

சீர்குலைந்த நிலையிலுள்ள பொருளாதாரம் சற்று முன்னேறிக் காணப்படுவதாகவும், அதனை மீட்டெடுத்து சுதந்திரமாக இலங்கைக்கு வெளிநாட்டு பொருட்களை இறக்குமதி செய்வது ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரே டொலரின் பெறுமதி உயரும் நிலைமை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும் பொருளாதாரம் சிதைந்த நிலையில் தற்போது டொலர் ஒன்றின் விலை 300 ரூபாவாக காணப்படுவதாகவும், அது மீளும் போது டொலரின் பெறுமதி அதிகரிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் புதிய விகாரை...

யாழ்ப்பாணம் தையிட்டி உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தனியார் காணியில் விகாரை நிர்மாணிக்கப்பட்டமைக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் பௌத்த விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

அது தொடர்பாக பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் முறைப்பாடுகளை தெரிவித்த நிலையில் அவர் குறித்த பகுதிக்கு சென்று அவர் நிலைமைகளை பார்வையிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே விகாரை அமைப்பதற்கான பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவத்தின் 542 வது படைப் பிரிவு பொறுப்பதிகாரி தன்னிடம் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

விகாரை அமைக்கப்படவுள்ளதாக கூறப்பட்ட இடத்தை பேருந்து தரிப்பிடமாக மாற்ற இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## தமிழரின் பிரச்சினை..! இடைக்...

யோதிலிங்கம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், தொடர்ந்தும் கட்சி அரசியலிலும் தேர்தல் அரசியலிலுமே கருத்தாக உள்ளனர். ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு ஒரு கட்சி செல்லவேயில்லை. அது தன்னை 24 கரட் என நினைத்துக் கொண்டிருக்கின்றது. மற்றறையவை பேச்சுவார்த்தைக்கு சென்றன. ஆனால் ஒருங்கிணைந்த செயற்பாடு மருந்துக்குக்கூட இருக்கவில்லை. கடந்த 15 ம் திகதி திங்கட்கிழமை அதிகாரப்பகிர்வு விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியுடன் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. தமிழரசுக்கட்சியும், குத்துவிளக்குக் கட்சிகளும் விக்கினேஸ்வரனின் கட்சியும் சந்திப்பில் கலந்து கொண்டன.

ஜனாதிபதிக்கு முன்னாலேயே சந்தி சிரிக்கக் கூடியதாக தமக்கிடையேயான முரண்பாடுகளை அவைமேடையேற்றின விக்கினேஸ்வரன் மாகாண சபைத்தேர்தல் நடைபெறும் வரை மாகாண இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைக்கும் யோசனை ஒன்றை முன்வைத்தார். ரணிலும் அதற்கு சாதமாகவே கருத்துக்களை தெரிவித்தார். இது ரணிலும் விக்கினேஸ்வரனும் பேசித்தீர்மானித்த யோசனையாகவும் இருக்கலாம் அல்லது புலம்பெயர்தரப்பின் யோசனைகள் விக்கினேஸ்வரனுக்கூடாக வந்திருக்கலாம்.

இவ் யோசனைகள் அடங்கிய வரைபு தமிழரசுக்கட்சிக்காரர்களுக்கும், குத்துவிளக்குக் காரர்களுக்கும் முன்கூட்டியே வழங்கப்பட்டது. அவர்களுக்குள் முரண்பாடு இருப்பின் இவ்யோசனையை இப்போது கொண்டுவர வேண்டாம் என விக்கினேஸ்வரனிடம் வேண்டுகோளை விடுத்திருக்கலாம். அவை எவற்றையும் மேற்கொள்ளாமல் ரணிலுக்கு முன்னாலேயே அதனை முழுமையாக நிராகரித்தனர். புதிய அரசியல் யாப்பை உருவாக்க வேண்டும், மாகாண சபைத்தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையே இரு தரப்பும் முன்வைத்தன. பெயருக்கு கட்சியினரிடம் ஆலோசித்த பின் கருத்துக்களைக் கூறுவதாகக் கூட கூறவில்லை

இடைக்கால நிர்வாகக் கோரிக்கை புதிதாக முன்வைக்கப்பட்ட ஒன்றல்ல. புலிகள் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்திருந்தனர். அதற்கான வரைபையும் சமர்ப்பித்திருந்தனர். கஜேந்திரகுமாரும் இது போன்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார். இக்கட்டுரையாளர் உட்பட பல கருத்துருவாக்கிகளும் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

சர்வதேச ரீதியாகவும் விடுதலைக்காக போராடுகின்ற சமூகங்கள் தீர்வு வரும் வரை இடைக்கால நிர்வாகத்தை கோரி வந்துள்ளன. பல நாடுகளில் அவை நடைமுறைப்படுத்தப்பட்டும் இருக்கின்றன. சூடான் இதற்குப்பிந்திய உதாரணம் ஆகம். புலிகளும் ஏனையவர்களும் முன்வைத்த இடைக்கால நிர்வாகக் கோரிக்கை விக்கினேஸ்வரன் ம்னவைத்த கோரிக்கையைப் போன்றதல்ல. அது முழு வடக்குக் கிழக்குக்குமான கோரிக்கை. விக்கினேஸ்வரன் மாகாண சபை மட்டத்திலேயே

## தமிழரின் பிரச்சினை..! இடைக்...

இக் கோரிக்கையை முன்வைத்திருந்தார். ஒரு வேளை தான் முதலமைச்சராகும் யோசனையும் கூட இருந்திருக்கலாம். தேர்தலும், புதிய யாப்பு முயற்சியும் இப்போதைக்கு சாத்தியமல்ல. ரணிலும் மொட்டுக்கட்சியினரும் தேர்தல் ஒன்றுக்கு தயாராகவில்லை. தேர்தல் நடைபெற்றால் இரு தரப்பினரின் இருப்பும் பூச்சியம் தான். ரணிலுக்கு பின்னால் நின்று வழிநடத்தும் மேற்குலகமும், இந்தியாவும் கூட ரணிலைப் பலவீனப்படுத்த ஒரு போதும் விரும்பமாட்டா. அவற்றைப் பொறுத்தவரை ரணில் அவர்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் சொத்து. ரணிலை இழக்க அவை தயாரில்லை

மறுபக்கத்தில் சர்வதேச நாணயநிதியம் எவ்வழிகளிலாவது இனப்பிரச்சினையைத் தீருங்கள் என வலியுறுத்தியுள்ளது. இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு லட்சமாக குறைக்கும்படியும் கேட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கான வேதனத்தில் 46 வீதம் படையினருக்கே வழங்கப்படுகின்றது. இந்தச் செலவைக் குறைக்கும் தேவையும் அரசிற்கு உள்ளது. அதிகாரப் பகிர்வையும் உள்ளடக்கிய புதிய யாப்பிற்கு தென்னிலங்கை தயாராவில்லை. அதற்குரிய அரசியல் கலாச்சாரம் இன்னமும் அங்கு துளி கூட வளரவில்லை. 13 வது திருத்தத்தை கூட நடைமுறைப்படுத்த தயாரில்லாத தென்னிலங்கையிடம் சமஸ்டி யாப்பை இப்போதைக்கு எதிர்பார்க்கவே முடியாது. புதிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கும் விருப்பும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடம் இல்லை.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தமிழ் மக்களுக்கு பயனளிக்கும் என்றும் கூற முடியாது. வடக்கில் இவை பயன்களைத்தந்தாலும் கிழக்கில் மோசமான நிலையையே உருவாக்கும். கிழக்குத்தமிழ் மக்களிடம் பிளவுகள் அதிகரிக்கும். முஸ்லீம் தரப்பு மாகாண சபை அதிகாரத்தை பெறக்கூடாது என்பதற்காகவே கிழக்கில் ஒரு பகுதித்தமிழர்கள் சிங்கள கட்சிகளுடன் இணைந்து மாகாண அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிப்பர். இது பெரும்தேசியத்திற்குள் தமிழ்த் தேசியம் கரைவதற்கான வாய்ப்புக்களையே உருவாக்கும். பிள்ளையானின் கட்சி மேல்நிலையாக்கம் பெறுவதற்கான வாய்ப்புக்களும் உருவாகும்.

இன்று சாத்தியம் இல்லாவிட்டாலும் எதிர்காலத்திலாவது தாயக ஒருமைப்பாட்டைப் பேணுகின்ற தீர்வு அவசியம். தாயக ஒருமைப்பாடு இல்லாமல் தமிழ் மக்களின் கூட்டிருப்பையும், கூட்டு உரிமையையும் , கூட்டடையாளத்தையும் ஒரு போதும் பேண முடியாது எனவே தாயக ஒருமைப்பாட்டை சிதைக்கின்ற செயற்பாடுகளுக்கு இப்போது போகாமல் இருப்பது நல்லது. தற்போதைய நிலையில் தாயக ஒருமைப்பாட்டை பேணுவதற்கான நிலைப்பாடு இடைக்கால நிர்வாகம் தான்.

தவிர ஆக்கிரமிப்புக்களை நிறுத்த வேண்டும். போரினால் பாதிக்கபட்ட மக்களின் நலன்களைப் பேணுதற்கு முயற்சிக்க வேண்டும். சகல வழிகளிலும் தமிழ்த்தேசத்தை வளர்க்க வேண்டும். தற்போதைய நிலையில் இதற்கு உதவப்போவதது இடைக்கால நிர்வாகம் தான். தற்போது சர்வதேசத்துடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைக்கான வழிகள் அடைக்கப்பட்டுள்ளன. இடைக்கால நிர்வாகம் அதனையும் திறக்கக்கூடியதாக இருக்கும். சுருக்கமாகக் கூறின் அதிகாரப்பகிர்வுடன் கூடிய அரசியல் யாப்பு சாத்தியமல்ல. தேர்தல் நடைபெறக்கூடிய நிலை இல்லை புவிசார் அரசியல்காரர்களும், பூகோள அரசியல்காரர்களும் ஆட்சி மாற்றம் ஒன்றுக்கு தயாராக இல்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு முன்னெப் போதையும் விட தங்களை தாங்களே ஆட்சி செய்கின்ற நிர்வாகம் ஒன்று தேவையாக உள்ளது. இடைக்கால நிர்வாகம் தவிர வேறு தெரிவு தற்போதைக்கு இல்லை என்றே கூறலாம். இடைக்கால நிர்வாகத்தை ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கொண் டே பெருமளவிற்கு உருவாக்கலாம். பாராளுமன்ற தீர்மானங்கள் கூட பெரிதளவிற்கு தேவைப்படாது. தேவைப்படின் மொட்டுக்கட்சிக்காரர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து சம்மதிக்க வைக்கலாம். சர்வதேசத்தின் கத்தி மொட்டுக்கட்சியை நோக்கி இருப்பதால் மொட்டுக்கட்சியினர் தமது இனவாத்தை அட க்கிவாசிக்கவே முற்படுவர்.

தற்போது எழும் கேள்வி தமிழ் மக்களுக்கேற்ற இடைக்கால நிர்வாகத்தை சாத்தியமாக்க என்ன செய்யலாம், என்பதே இதில் முதலாவது இது பற்றிய உரையாடலைத் தொடக்கி வைப்பதே! குறிப்பாக இடைக்கால நிர்வாகத்தின் உள்ளடக்கம் பற்றி வலுவான கலந்துரையாடலை நடாத்த வேண்டும். சர்வதேச ரீதியாக இடைக்கால நிர்வாக அனுபவங்களையும் சர்வதேச மட்டத்தில் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களையும் இது விடயத்தில் பெற்றுக் கொள்வது அவசியம்.

இரண்டாவது புவிசார் அரசியல்காரர்களோடும், பூகோள அரசியல்காரர்களுடனும் இது தொடர்பான உரையாடலை நடாத்த வேண்டும். புதிய யாப்பு முயற்சிகளோ, தேர்தல்களோ நடைபெற முடியாத நிலையில் நடைமுறைக்கு சாத்தியமானது இடைக்கால நிர்வாகம் தான் என்பதை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். புலம்பெயர் தரப்பின் முதலீடுகளையும் உள்வாங்கலாம் என்பதையும் அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். சர்வதேசத்துடனான ஊடாட்டம் தமிழ்த்தரப்பினரிடம் குறைவாகவே உள்ளது. குறைந்தபட்சம் மனோகணேசனின் தமிழ் முற்போக்கு கூட்டணி எடுக்கும் முயற்சிகளைக் கூட எடுப்பதற்கு தமிழ்த் தலைமைகள் தயாராக இல்லை. உலக வங்கியின் நிவாரணத் திட்டம் மலையக மக்களுக்குக் கிடைக்காது என தெரியவந்த போது தமிழ் முற்போக்கு கூட்டணியினர் உலக வங்கிப்பிரதிநிதிகளை நேரடியாகச் சந்தித்துப் பேசியுள்ளனர். அவ் உதவித்திட்டம் மலையக மக்களுக்கும் கிடைக்கும். மலைய மக்கள் சேர்க்கப்படவில்லை என்றால் உலக வங்கி உதவிகளை வழங்காது என உலக வங்கிப்பிரதிநிதிகள் உறுதி கூறியுள்ளனர். இது போன்ற முயற்சிகளை சர்வதேச நாணய நிதிய உதவிகள் தொடர்பாகவும் தமிழ்த்தலைமைகள் மேற்கொண்டிருக்கலாம். இனப்பிரச்சினைத்தீர்வுடன் உதவிகளை இணைக்கும்படி கோரியிருக்கலாம். துரதிஸ்டவசமாக எந்த முயற்சிகளும் இது விடயத்தில் நடக்கவில்லை. இந்த விடயத்தில் மனோகணேசனுக்கு இருந்த சமூக அக்கறை கூட தமிழ்கட்சிகளின் தலைவர்களுக்கு இருக்கவில்லை. ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் கோரியதையும் இங்கு கவனத்தில் எடுப்பது நல்லது.

இடைக்கால நிர்வாகத்தில் அங்கம் வகிப்பவர்களை தேர்ந்தெடுப்பது தொடர்பாக கட்சி அரசியல் கலக்காமல் இருப்பது நல்லது. கல்வியாளர்கள், மதத் தலைவர்கள், சமூகப்பெரியவர்கள் அடங்கிய குழு ஒன்றைத்தெரிவு செய்து அதனிடம் அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஒப்படைக்கலாம். சுமந்திரன் இடைக்கால நிர்வாகத்தை எதிர்ப்பதற்கு கட்சி அரசியல் தவிர வேற எதுவும் இல்லை. ஆனால் குத்து விளக்குக்காரர்களுக்கு இடைக்கால நிர்வாகம் வந்தால் 13 வது திருத்தம் இல்லாமல் போகும். அது இடம்பெறின் இந்தியாவின் பிடி தளர்ந்துவிடும் என்று கவலை இருக்கலாம். 13 வது திருத்தத்தையே காப்பாற்ற முடியாத இந்தியாவிடம் பிடி இருப்பதும், இல்லாமல் இருப்பதும் ஒன்று தான். குத்துவிளக்குக்காரர்கள் இந்தியாவைப்பற்றி கவலைப்படுவதை விட தமிழ் மக்களைப் பற்றி கவலைப்படுவது நல்லது. மொத்தத்தில் தமிழ்த்தேசிய சக்திகளுக்கு பல பணிகள் காத்திருக்கின்றன என குறிப்பிட்டுள்ளார்.


# நடமாடும் சேவை

## கிழக்கு மாகாணம்

**தனிநபர்களின் சட்ட ஆவணங்கள் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பது மற்றும் வேறு சட்ட உதவிகளை வழங்குவதற்குமான நடமாடும் சேவை**

27 மே 2023 மு.ப.9.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை
மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளாகம்

## இங்கு பின்வரும் சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படும்

- குடியுரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்
- பிறப்பு, விவாகம், இறப்புச் சான்றிதழ்கள் பதிவுசெய்வது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அவ் ஆவணங்களை பெற்றுக்கொள்வது தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுதல்
- தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வது, திருத்தம் செய்வது மற்றும் காணாமல் போன அடையாள அட்டைகளுக்கான இரண்டாவது பிரதி ஒன்றினை வழங்குவது தொடர்பான சேவைகளை வழங்குதல்
- காணி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகாணுதல்
- இழப்பீடுகளுக்கான நட்டஈட்டினை பெற்றுக்கொள்வது தொடர்பாக விண்ணப்பித்தவர்களின் கோவைகளில் காணப்படும் குறைபாடுகளை பூர்த்தி செய்தல்
- காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் அவ் விசாரணைகளுக்கு தேவையான ஆவணங்களை பூர்த்தி செய்தல்
- மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துதல்
- காணி தொடர்பாக விசேட மத்தியஸ்த சபை தொடர்பான விழிப்புணர்வு வழங்குதல்
- சட்ட ஆலோசனையை வழங்குதல் மற்றும் சட்ட ஆலோசனை முகாமினை நடாத்துதல்



# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது




கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழுள்ள மூலிகைத் தோட்டங்களில் மூலிகைத் தாவரங்களை நாட்டி, சரியான முறையில் பராமரித்து அதன் பயன்பாட்டுப் பொருட்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, திருகோணமலை கப்பல்துறையில் 4 ஏக்கர் கொண்ட மூலிகைத் தோட்டத்திலும், மட்டக்களப்பு வாகரையில் 1 ஏக்கர் கொண்ட மூலிகைத் தோட்டத்திலும் மூலிகைப் பயிர்களை நாட்டி, அதனை பராமரித்து அதன் மூலம் கிடைக்கின்ற மூலப் பொருட்களை சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. மூலிகைப் பயிர்களை செய்கை பண்ணக்கூடிய வகையில், நீர் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அங்கு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்பிட்ட மூலிகைத் தோட்டத்தில் 3 மாத காலப் பகுதியில் செய்கை பன்னக்கூடிய...**

1. சிற்றரத்தை
2. திப்பிலி
3. இஞ்சி
4. சுக்கு
5. ஆடாதோடை
6. வெண்நொச்சி போன்ற இன்னும் பல மூலிகைத் தாவரங்களை செய்கை பன்னவேண்டும்.

இந்த நடைமுறையை ஊவா மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மிக நீண்ட காலமாக கடைப்பிடித்து வருவதுடன், இதற்குத் தகுதியானவர் களுக்கு வழங்கி வருவதுடன், அவர்களினால் செய்கை பன்னுகின்ற மூலிகையின் பயன்பாட்டு மருத்துவப் பொருட்களை குறித்த திணைக்களம் கொள்வனவு செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**இதுபோன்ற நடைமுறையை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதுடன், இதில் ஆர்வமுள்ளவர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 026 - 222 5993, 026 - 222 5639, 026 - 222 5640 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.**

# கிழக்கு மாகாணத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும் - அமைச்சர் ஜீவன்



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாகாண தலைமைச்செயலாளர் மற்றும் அமைச்சுகளின் உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோர் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானை சந்தித்து, கிழக்கு மாகாணத்துக்குரிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் பேச்சு நடத்தினர்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுதருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது உறுதியளித்தார்.

இதன் ஓர் அங்கமாக பின்தங்கிய பகுதிகளில் உள்ள நீர்விநியோக பிரச்சினையை சீர்செய்ய, உள்ளுராட்சி சபைகளுக்கு புதிய நீர் குழாய்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அத்துடன், தான் அமைச்சு பதவியை ஏற்ற பின்னர் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் பற்றியும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது தெளிவுபடுத்தினார்.

இந்த சந்திப்பின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடதக்கது.




காலத்தின் தேவையறிந்து உதிரதானத்தில் பங்குகொள்ளுமாறு சமூக ஆர்வலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

# மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பினால் 2023 விருது வழங்கல் விழாவில் இரு ஊடகவியலாளர்களுக்கு விருது!

மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பினால் வருடாந்தம் நாடாத்திவரும் 2023 விருது வழங்கல் விழா (20) கொழும்பு BMICH மண்டபத்தில் அதன் பிரதித் தலைவர் கலாநிதி எப்.எம்.சரீக் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக இந்திய நாட்டைச் சேர்ந்த ஆசிய நாடுகளுக்கான சேவைகள், அரசியலமைப்பு மற்றும் பாதுகாவலர் அமைப்பின் வெளியுறவு அமைச்சர் பி.ஐயப்பன் கலந்துகொண்டு சிறப்பித்தார். மேலும், இந்திய நாட்டின் சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின் நிறுவனரும் தலைவருமான டொக்டர் கே.எம்.சென்தூர் பாண்டியன், சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின் பிரதம ஆலோசகர் டொக்டர் மோகன் லால் அஜிகுமார் அத்மா உள்ளிட்ட பலர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தேசிய ரீதியில் திறமைகளை வெளிப்படுத்திவருகின்ற ஆளுமைகளை வருடாந்தம் கௌரவித்து வருகின்ற செயற்பாடுகளை மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பு தவராது செய்து வருகின்றது. அதற்கினங்க, இவ்வருடமும் நாடளாவிய ரீதியில் 60 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பதக்கம், சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இம்முறை தெரிவு செய்யப்பட்டவர்களில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் கடந்த வருடம் சுற்றுச் சூழல் தொடர்பாக பல விழிப்புணர்வுக் கட்டுரைகளை தொடராக எழுதியமைக்காகவும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர் திருமதி துஷ்யந்தி சுரேஸ் (துஷாரா) கடந்த வருடம் ஆயள் வேத மருத்துவ மூலிகை கட்டுரைகளை தொடராக எழுதியமைக்காகவும் இரு ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.








# அம்பாள் திருக்குளிர்த்தி ஆலோசனைசபைக் கூட்டம்! குளிர்த்தி விஞ்ஞாபனம் வெளியீடு.





வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசித்திங்கள் திருக்குளிர்த்திச்சடங்கு தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (25) வியாழக்கிழமை ஆலய ஒன்று கூடல் மண்டபத்தில் நடை பெற்றது.

ஆலய தர்மகத்தாக்களான பிரதம பொறியியலாளர் பரமலிங்கம் இராஜமோகன் மற்றும் இரா.குணசிங்கம் தலைமையில் முதல் முறையாக நடைபெற்றது.

அதன் போது காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் உள்ளிட்ட திணைக்களத் தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இவ்வருட திருக்குளிர்த்தி விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்தனர். புனித வாரம் உள்ளிட்ட பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. துறைசார்ந்த அதிகாரிகளின் கருத்துக்களும் பெறப்பட்டன. பெருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கடல்தீர்த்தம் எடுத்து வந்து திருக்கல்யாணக்கால் நடும் பைவத்துடன் ஆரம்பமாகின்றது.

இச்சடங்குப்பெருவிழா தொடர்ந்து 08 தினங்கள் நடைபெற்று ஜூன் மாதம் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும்.

30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சடங்குப்பூஜையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.தொடர்ந்து புதன் கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து பகல் 1மணிக்கு பூசையும் மாலை 7மணிக்கு சடங்குப்பூசையும் ஊர் சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

05ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கலுக்கான நெற்குத்தும் வைபவம் நடைபெறும். மறுநாள்(6) செவ்வாய் அதிகாலை குளிர்த்தி பாடப்பெறும். எட்டாம் சடங்கு 12ஆம் திகதி மாலை 7 மணிக்கு இடம்பெறும் என மேலும் அவர்கள் தெரிவித்தனர்.



# 2020ல் கல்முனை உவெஸ்லி பாடசாலைக்கு தொழில்நுட்ப பீடம்

## அமைப்பதற்காக ஒதுக்கிய நிதி எங்கே?

நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதும் பின்னர் அந்நிதிகள் நிறுத்தப்படுவதும், அல்லது அவை வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றதுமான நிலைமை கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதேசங்களிலே நிறையவே இடம்பெற்றிருக்கின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போது கல்முனை உவெஸ்லி பாடசாலைக்கு தொழில்நுட்ப பீடம் அமைப்பதற்காக ஒதுக்கிய நிதி தொடர்பில் கல்வி அமைச்சரிடம் கேள்வியெழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 06.05.2020ம் ஆண்டு நான்கு கோடியே முப்பத்து ஐந்து இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து தொன்னூற்று ஒரு ரூபாய் நிதி கல்முனை உவெஸ்லி பாடசாலையின் தொழில்நுட்பக் கட்டிடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட அந்த நிதிக்கு என்ன நடந்தது என்ற விடயம் தெரியப்பட வேண்டும். அவ்வாறு பல இடங்களில் தொழில்நுடபக் கட்டிடத்திற்காக ஒதுக்கிய நிதிகளில் கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் உவெஸ்லி பாடசாலையில் மாத்திரம் ஏன் அது நிறுத்தப்பட்டது.

அப்பாடசாலையில் இருந்த பழைய கட்டிடம் அகற்றப்பட்டதற்கும் புதிய கட்டிடத்திற்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று அமைச்சர் தெரிவித்தார். நிச்சயமாக அவ்வாறு இல்லை. தொழில்நுட்ப கட்டிடம் அமைப்பதற்காகவே பழைய கட்டிடம் அகற்றப்பட்டது. இந்த விடயத்தில் பாரிய பிரச்சனை நடைபெற்றிருக்கின்றது. தற்போது அந்தக் கட்டத்தை அமைப்பதாக அமைச்சரால் கூறப்பட்டுள்ளது. அதற்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உண்மையிலேயே சில விடயங்கள் எமது மாகாணத்திலே நடைபெறுவது வழமை. சில நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதும், அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டதன் பின்னர் அந்நிதிகள் நிறுத்தப்படுவதும், அல்லது அவை வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றதுமான நிலைமை கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலே தமிழ் பிரதேசங்களிலே நிறையவே இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றுள் சிலவற்றை என்னால் குறிப்பிட்டும் கூற முடியும். 2008ம் ஆண்டு நாவிதன்வெளி பிரதேசத்திலே கோட்டக் கல்வி அலுவலகம் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி அத்திவாரம் இட்டதோடு இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பல விடயங்கள் நடந்திருக்கின்றது. தயவு செய்து எதிர்காலத்திலே இவ்வாறான தவறுகள் கல்வியிலே நடைபெறக் கூடாது என்று தெரிவித்தார். இதன் போது அமைச்சரால் தொழில்நுட்ப பீடம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்ற உறுதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








இப்பத்திரிகை 26.05.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.